*தமிழர் இறைமைப் புரிந்துணர்வு*

# *ஈழத்தமிழர் தேசியக்கேள்விக்கு உலகளாவிய நீதிகேட்கும் பிரகடனம்*

*தமிழ்நாடு, கனடா, அமெரிக்கா, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளில் வசிக்கும் சமூகச் செயற்பாட்டு ஆர்வலர்களாகிய நாம் இலங்கைத்தீவிலும், இந்தியாவிலும் புலம்பெயர்ந்த உலகத்திலும் வாழும் ஒத்தபோக்குடைய பல தரப்பினரோடும், குறிப்பாக இளந் தலைமுறையினரோடு, தொடர்பாடி விவாதித்த பின்னர் இப்பிரகடனத்தை வெளியிடுகிறோம். இலங்கைத்தீவில் புரையோடிப் போயிருக்கும் ஈழத்தமிழர் தேசியக்கேள்வி உரிய முறையில் அணுகப்படுவதன்மூலம் அமைதியும் உலகளாவிய நீதியும் நிலைநிறுத்தப்படவேண்டும் என்பதே இதன் நோக்கம். உலக ஆதிக்க சக்திகளின் மறைமுகமான ஒப்புதலுடன் இலங்கை அரசானது இத்தீவின் வடக்குக் கிழக்குத் தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் மீது இன அழிப்பு மற்றும் இனக் கட்டுமான அழிப்பு அணுகுமுறைகளைத் தொடர்ச்சியாகப் பிரயோகித்துவருவதானது தென்னாசியாவின் அமைதியையும் திடநிலையையும் அச்சுறுத்துவதுடன் முழு உலகுக்கும் ஆபத்தான முன்னுதாரணம் ஒன்றையும் உருவாக்கியுள்ளது.*

*ஆதலின், இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கு வழிவந்தவர்களாக, அத்தீவிலும் புலம்பெயர்ந்தும் மற்றும் ஏதிலிகளாக இந்தியாவிலும் பிற இடங்களிலும் வாழும் மக்களிடையே, தன்னாதிக்கமும் இறைமையும் கொண்ட தமிழீழ நாட்டை உருவாக்குவது தொடர்பான வாக்கெடுப்பொன்று உலகப்பன்நாட்டு முடிவொன்றின் மூலம் மேற்பார்வையிட்டு நடத்தப்படவேண்டும் என்று நாம் பிரகடனம் செய்கின்றோம்.*

*ஈழத்தமிழர்களின் வரலாற்றுவழிவந்த இறைமை, போராடிப்பெற்ற இறைமை என்பனவற்றுடன், அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக உலகத்தால் வழங்கப்படவேண்டிய இறைமை என்ற அரசியற் கோட்பாடும் இவ்விடயத்தில் பொருத்தமுடையது என்ற அடிப்படையில் இப்பிரடகனம் வெளியிடப்படுகிறது.*

> ***வரலாற்றுவழிவந்த இறைமை:*** *இலங்கைத் தீவின் மிகப்பழைய ஆவணச் சான்றுகளின் காலத்திலிருந்து ஒரு தேசிய இனமாக இருந்துவந்துள்ள ஈழத்தமிழர்கள், வரலாற்று அடிப்படையிலும் புவியியல் அடிப்படையிலும் வரையறுக்கப்படக்கூடிய தாயகம், தனித்துவமான மொழி, பண்பாடு என்பனவற்றுடன் தமக்குரிய தேசம் பற்றிய*

*கூட்டுப்பிரக்ஞை உடையவர்களாகவும் கூர்ப்படைந்திருக்கிறார்கள். ஐரோப்பிய காலனிய காலத்தில் போர்த்துக்கேயருக்கும் தொடர்ந்து ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்கும் தமது இறைமையை இழந்து, காலனிய முடிவில் அதை மீளப்பெறாத வரலாறு இவர்களுக்கு உண்டு. ஐரோப்பியக் காலனியத்தில் இருந்து விடுதலைபெற்ற இலங்கையில் சிங்களத் தேசத்துடன் இறைமையைப் பகிர்வதற்காக ஜனநாயக முறையில் தொடர்ச்சியாக 30 ஆண்டுகள் போராடிய வரலாறும் இவர்களுக்கு உண்டு. வெற்றிபெறாத இப்போராட்டத்தின் விளைவு, 1976 இல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுதந்திரப் பிரகடனமாக வெளிப்பட்டதும், அதை 1977 பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கு மக்கள் உறுதிப்படுத்தியதுமான வரலாறும் இவர்களுக்கு உண்டு.*

**போராடிப்பெற்ற இறைமை:** *ஜனநாயக முறைகள் பலிக்காமற்போன பின்னர் இலங்கை அரசின் அடக்குமுறையால் உந்தப்பட்டு ஆயுதப் போராட்டமொன்றை அடுத்த 30 ஆண்டுகள் நடத்தியதன் விளைவாக, நடைமுறையிலான அரசு ஒன்றை ஈழத்தமிழ்மக்கள் உருவாக்கி அதற்கூடாக ஓர் இறைமையைச் சம்பாதித்திருந்தார்கள். 2002ம் ஆண்டு சர்வதேசப் பின்னணியுடன் வந்த அமைதித் திட்டம் இந்த இறைமைக்கு மறைமுகமாகக் கிடைத்த ஒப்புதலாகும். இந்த நடைமுறை அரசால் அடையாளங்காட்டப்பட்ட அரசியற் குழுமம் 2004ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றமை ஈழத்தமிழ் பொதுமக்கள் இந் நடைமுறை அரசுக்கூடாகப் பெறப்பட்ட இறைமையை உறுதிப்படுத்தியிருப்பதைக் காட்டுகிறது.*

**அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக உலகத்தால் வழங்கப்படவேண்டிய இறைமை:** *நடைமுறை அரசுக்கு எதிராக சமநிலை குலைக்கப்பட்டமை தமிழினப் பேரழிவில் முடிந்தமையை, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கையும் நோர்வேயின் அமைதி நடவடிக்கை மீதான ஆய்வறிக்கையும் – இனப் பேரழிப்பு என்று பெயர் குறிப்பிடாவிட்டாலும் கூட – மறைமுகமாக ஏற்றுக்கொண்டுள்ளன. இனத்தால் சிங்கள இராணுவமொன்று தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து ஆளுவதும், குடிசார் மாற்றங்களுக்காகவும் வேண்டுமென்றே நில அளவு, மக்கட்பரப்பைத் தொகுதிப் பிரதிநிதித்துவத்தில் குறுக்குவதற்காகவும் இராணுவப் பின்பலத்துடன் நிகழும் சிங்களக் குடியேற்றமும், மற்றும் அரசின் பல்வேறு அமைப்புகளாலும் மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழர்*

*தாயகத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அடிமைப்படுத்தலும், வெளிப்படையான, முனைப்பான, திட்டமிடப்பட்ட, முழுவேகமாக முடுக்கிவிடப்பட்ட இனக்கட்டமைப்புப் பேரழிவொன்றைச் சுட்டிக்காட்டுகின்றன. இது, ஈழத்தமிழர் தேசத்தை முழு அழிவிலிருந்து பாதுகாக்கக் கோரும் உரிமையை கட்டாயமாக்குகிறது. எனவே, 'அழிவில் இருந்து பாதுகாக்கும் இறைமை' என்ற அரசியற் கோட்பாடு, இனப் பேரழிப்பில் இருந்தும் இனக் கட்டுமானப் பேரழிப்பில் இருந்தும் தம்மைப் பாதுகாப்பதற்காக சுதந்திரம் கோரும் ஈழத்தமிழர் விடயத்தில் கையாளப்படக்கூடியது.*

*ஒருங்கிணைந்த இலங்கைக்குள் மட்டுந்தான் தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்துவதை இவ்விவகாரத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லாச் சக்திகளும் நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று நாம் பிரகடனம் செய்கின்றோம்.*

*இலங்கை - தமிழீழப் பிணக்கை தேசங்களுக்கிடையிலான ஒரு சிக்கலாக அணுகி, நீடித்த அமைதியையும் நீதியையும் கொண்டுவந்து, முரண்பட்டிருக்கும் தேசங்கள் தத்தமது இறைமையை முழுமையாகக் கையாளுவதற்கூடாக அமைதியாக இயைந்து வாழ்வதற்கு உதவும் வகையில், ஒரு முனைப்பான, வெளிப்படையான, சர்வதேசச் செயற்திட்டம் ஒன்றை பன்நாட்டு விவகாரங்களில் பாத்திரம் வகிப்போர் கொண்டுவரவேண்டும் என்றும், உள்நாட்டுத் தீர்வு என்று சொல்லிக்கொள்ளும் நடிப்பை அவர்கள் கைவிடவேண்டிய காலம் வந்துவிட்டதென்றும், நாம் பிரகடனம் செய்கின்றோம்.*

*ஈழத்தமிழர்களின் போராட்டம் சார்ந்த குறியீடுகளும் வெளிப்பாடுகளும் அவதூறு செய்யப்படாமல் ஆதரவளிக்கப்படவேண்டியவை என்றும், ஈழத்தமிழர்களின் விடுதலைக் குறிக்கோளுக்காக தமது உயிர்களை ஈந்த அனைவரும் அங்கீகரிக்கப்படவேண்டியவர்கள் என்றும், ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு அரசியல் தீர்வைக் கொண்டுவருவதற்கான ஒருங்கிணைந்த உலக நடவடிக்கைக்கு உலகெங்குமுள்ள எல்லா ஜனநாயக சக்திகளும் பங்களிக்கவேண்டும் என்றும் நாம் மேலும் பிரகடனம் செய்கின்றோம்.*


*பூங்குழலி நெடுமாறன்*
*தமிழ் நாடு, இந்தியா*

*கிருஸ்ணா சரவணமுத்து*
*ரொறன்ரோ, கனடா*

*ரஜீவ் சிறீதரன்,*
*வாசிங்டன், அமெரிக்கா*

*லதன் சுந்தரலிங்கம்,*
*லுசேர்ன், சுவிற்சர்லாந்து*


***27.11.2011***